**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS.No. 143/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.3 |
| NAME | ஜெகன்மோகன் | TALUK | ஆம்பூர் |
| FATHER NAME | ஜெயபிரகாஷ் | RELIGION | இந்து |
| AGE | 39 | OCCUPATION | |
| VILLAGE | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 22.08.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் ஜே.பி.டி தனியார் பஸ் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நைட் டிராவல்ஸ் தொலைதூர பேருந்தை இயக்கி வருகிறேன். விடுமுறை எங்களுக்கு கிடைப்பது சிரமம் என்றால் சரிதான், கேட்டால் தான் கொடுப்பார்கள். இந்த வழக்கை யார் யார் மீது எதற்காக போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும்.

2. தனசேகர் என்பவர் சுகுமார் என்பவர் மீது பயிர் செய்ய விடமாட்டேன் என்கிறார்கள் என்பதற்காக வழக்கு போட்டுள்ளார். அதாவது சொத்தானது சுகுமார் பயிர் செய்துவரும் நிலத்தில் அதில் தனசேகர் பயிர் செய்ய சென்றபோது தடுக்கப்பட்டார் என்றால் சரியல்ல தனசேகர் அவரது சொத்தில் பயிர் செய்ய சென்றபோது பக்கத்து நிலத்துக்காரரான சுகுமார் தடுத்துள்ளார்.

3. தீனதயாளனுக்கு தாவா சொத்து ஆதியில் சொந்தம் என எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் ஐயரிடம் இருந்து வாங்கியதாக கேள்விப்பட்டேன். மேற்படி ஐயரிடம் இருந்து வாங்கியதாக சொல்வது ஜெயகுமார் ஐயரின் மூதாதையர்களிடம் இருந்தா என்றால் கிடையாது. எந்த ஐயரிடம் இருந்து வாங்கினார் என்றால் ஜெயகுமார் ஐயரிடம் இருந்து தாத்தா வாங்கியதாக கேள்விப்பட்டேன்.

4. நான் எங்கு வசிக்கிறேன் என்றால் ஆம்பூரில் கதவு எண்.4. குடியாத்தத்தில் உறவினர்கள் யாராவது உள்ளார்களா என்றால் உள்ளார்கள். வாதி குடும்பத்தினர் எனது உறவினர்களா என்றால் ஆமாம். வாதி தனசேகரன் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா. தீனதயாளன் நாயுடு எனக்கு என்ன உறவு என்றால் தாத்தா.

5. வாதியும் அவரது சகோதர, சகோதரிகளும் தாவா சொத்தை அனுபவிப்பதாக எப்படி சொல்கிறேன் என்றால் நான் கண்கூடாக பார்த்துள்ளேன். நான் வாதியின் உறவினர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சுகுமார் தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல, பொய்யான தகவல். பிரதிவாதிகள் பெயர் சுகுமார், அவரது தம்பி பெயர் தெரியவில்லை. வேறு யார் இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

6. முதல்முதலில் பிரதிவாதிகள் அனுபவத்தை இடையூறு செய்ததாக சொல்லும் தேதி குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, நான் அடிக்கடி வெளியே சென்றுவிடுவேன். தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் தாவா சொத்தில் சித்தப்பா பயிர் செய்து நாங்கள் சாப்பிட்டுள்ளோம் அதனடிப்படையில் சொல்கிறேன்.

7. பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்து குறித்து என்ன ஆவணங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். சாட்சி தற்போது அவர்களிடம் எந்த ஆவணமும் இல்லை என சொல்கிறார். வாதி தனசேகரன் தாவா சொத்தில் கடைசியாக எப்போது பயிர் செய்தார் என்றால் சுமார் 8 வருடத்திற்கு முன்பு. தற்போது தாவா சொத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும், கரம்பாக வைத்துள்ளோம்.

8. தாவா சொத்தில் எத்தனை கிணறு உள்ளது என்றால் கிணறு கிடையாது. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்று தெரியுமா என்றால் தெரியும் 3 ஏக்கர் 60 செண்ட். நான் தாவா சொத்திற்கு கடைசியாக எப்போது போனேன் என்றால் மூன்று மாதத்திற்கு முன்பு போனேன். தாவா சொத்தில் மூன்று மாதத்திற்கு முன்பு என்ன பயிர் இருந்தது என்றால் ஒன்றுமில்லை கரம்பாக இருந்தது.

9. தாவா சொத்து சுகுமாரின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் அதில் மூன்று மாதத்திற்கு முன்பு நெற்பயிர் இருந்தது என்றாலும் அவர் தான் பயிர் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல பொய்யான தகவல். தாவா சொத்தின் உரிமை குறித்தும் அதன் சுவாதீனம் குறித்தும் நான் சொல்லும் சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று தற்போதைய கிராம நிர்வாக அலுவலர் தான் சாட்சியம் அளிக்க முடியும் என்றாலும் நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தானது 2ஆம் பிரதிவாதிக்கும் அவரது வாரிசுக்கும் மற்றும் அவரது மூதாதையர்களுக்கும் வழிவழியாக பதிவுத்துறை ஆவணம் மற்றும் வருமானத்துறை ஆவணம் அவர்கள் பெயரில் உள்ளது என்றாலும் வாதி போலியான ஆவணம் மூலம் தாக்கல் செய்து தாவாவிற்கு ஆதரவாக அவரது அண்ணன் மகனான நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.22 18:29:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.